# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:109 ★20.08.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:109 ★20.08.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு:

## சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவிப்பு

தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 உயர்த்தி முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் நேற்று அறிவிப்பு வெளியிட்டு அவர் பேசியதாவது: உலகில் தான் உற்பத்தி செய்யும் பாலைத் தனது சந்ததிகளுக்கு மட்டுமின்றி, மனிதர்கள் உள்ளிட்ட பிற ஜீவராசிகளுக்கும் வழங்கி உயிரைக் காக்கும் பசுவைத் தெய்வமாகப் போற்றி வளர்த்து வருவது நமது பாரம்பரியத்தின் சிறப்பு.

இன்றைய அறிவியல் உலகில், ஒரு லிட்டர் பாலை உற்பத்தி செய்வதற்காகப் பசுவின் உடலில் சுமார் 500 லிட்டர் ரத்தம் சுத்திகரிக்கப்படுவதாகக் கூறப்படும்போது, பசுவின் உழைப்பை எண்ணி வியக்கத் தோன்றுகிறது. தமிழகத்தில் 8,800 பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 3.16 லட்சம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து தினசரி 34 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு ஆவின் நிறுவனத்தின் மூலம் நாளொன்றுக்கு 31 லட்சம் லிட்டர் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது 4.3 சதவீதம் கொழுப்புச் சத்து மற்றும் 8.2 சதவீதம் இதரச்சத்துக்கள் அடங்கிய ஒரு லிட்டர் பாலுக்கு கொள்முதல் விலையாக ரூ.35ம், மாநில ஊக்கத்தொகையாக ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.3 ரூபாயும், என ஒரு லிட்டருக்கு கொள்முதல் விலையாக ரூ.38 கடந்த 2022 நவ.5ம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.



அதிகாலை 3 மணிக்கே எழுந்து மாடுகளை சுத்தம் செய்து, பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் உழைப்பையும், தீவனம் மற்றும் வேலையாட்களின் கூலி உள்ளிட்ட அதிகரித்து வரும் செலவுகளையும் கடந்த கால அரசு போதிய அளவில் கருத்தில் கொள்ளவில்லை. உற்பத்தி யாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கூட இல்லாமல் இருந்துள்ளது.

கடந்த காலத்தில் கொள்முதல் விலை உரிய அளவில் உயர்த்தப்படாத நிலையில், நம் அரசு சந்தித்து வரும் அதிகப்படியான நிதி நெருக்கடியிலும் பால் உற்பத்தியாளர்களின் நலனையும் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு, அவர்களின் உன்னதமான உழைப்புக்கு உரிய மதிப்பை வழங்கும் வகையில் கொள்முதல் விலையை உயர்த்துவது நமது அரசின் கடமையாகும். தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் 3.16 லட்சத்துக்கும் மேலான பால் உற்பத்தியாளர்கள் பயன் அடையும் வகையில், பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக ரூ.1 ரூபாய் உயர்த்தவும், மேலும், அரசு ஊக்கத் தொகையை ரூ.3 லிருந்து ரூ.5 ஆக உயர்த்தவும், இதன் மூலம், ஒரு லிட்டர் பாலுக்கான கொள்முதல் விலையை ரூ.38 லிருந்து ரூ.41ஆக உயர்த்தவும் அரசு முடிவெடுத்துள்ளது.

இந்த கொள்முதல் விலை உயர்வால் கூடுதலாக ஒரு மாதத்துக்கு ரூ.30 கோடியும், ஆண்டுக்கு ரூ.360 கோடியும் செலவாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தமிழக பால் முகவர்கள் சங்கத்தின் தலைவர் பொன்னுசாமி வெளியிட்ட அறிக்கையில், 'பால் உற்பத்தியாளர்களுக்கு மாநில அரசிடமிருந்து லிட்டருக்கு ரூ.2ம், ஆவின் தரப்பிலிருந்து லிட்டருக்கு ரூ.1ம் ஆக மொத்தம் லிட்டருக்கு ரூ.3 பால் கொள்முதல் விலை உயர்த்தப்படுவதாக சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிட்டுள்ள தமிழக முதல்வருக்கும், பால்வளத்துறை அமைச்சருக்கும் எங்கள் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி' என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு பால் முகவர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பால் உற்பத்தியாளர்கள் நலனையும், ஆவின் கூட்டுறவு அமைப்பையும், பொது மக்கள் நலனையும் பாதுகாத்திட அரசும், ஆவின் நிறுவனமும் மறுபரிசீலனை செய்து கொள்முதல் விலை மற்றும் ஊக்கத் தொகை விலையை லிட்டருக்கு ரூ.20 வரை உயர்த்தி வழங்க வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

## மாமண்டூர் மக்கள் தொடர்பு முகாமில்

# 197 பயனாளிகளுக்கு ரூ.26.93 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் கலெக்டர் வந்தனா கார்க் வழங்கினார்

திருவண்ணாமலை, ஆக. 20

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டதுடன், பல்வேறு அரசு நலத்திட்டங்களின் கீழ் 197 பயனாளிகளுக்கு ரூ.26 லட்சத்து 93 ஆயிரத்து 252 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

முகாமில் பேசிய மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி குழந்தைகள், பெண்கள் மற்



றும் இளைஞர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மாவட்டத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மாவட்டத்தில் போதைப்பொருட்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கடைகளில் போதைப் பொருட்களின் பயன்பாடு மற்றும் விற்பனையை தடுக்கும் வகையில் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். போதைப்பொருட்களின் நடமாட்டம் குறித்து தகவல் தெரிந்தால் பொதுமக்கள் உடனடியாக காவல்துறை அல்லது மாவட்ட நிர்வாகத்திடம் புகார் அளிக்க வேண்டும். போதைப்பொருட்களை பயன்படுத்துவோர் மற்றும் விற்பனை செய்வோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கவும், அனைத்து பகுதிகளுக்கும் தடையின்றி குடிநீர் வழங்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். பொதுமக்கள் தண்ணீரை தேவையான அளவு சிக்கனமாக பயன்படுத்துவதுடன், மழைநீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும். மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டும். பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து, மஞ்சப்பை உள்ளிட்ட சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களை பயன்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். சாலை விபத்துகளைத் தவிர்க்க அனைவரும் சாலை பாதுகாப்பு விதிகளை கடைபிடித்து, தலைக்கவசம் அணிந்து பாதுகாப்பாக வாகனங்களை இயக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

முகாமில் வருவாய்த் துறை சார்பில் ஒரு பயனாளிக்கு வீட்டுமனை பட்டா, 3 பேருக்கு பட்டா மாறுதல் ஆணைகள், 2 பேருக்கு வாரிசுச் சான்றிதழ்கள், 24 சிறு, குறு விவசாயிகளுக்கு சான்றிதழ்கள், 14 பேருக்கு இயற்கை மரண உதவித்தொகை, 16 பேருக்கு விபத்து நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் சார்பில் 5 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், 42 பேருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள், தோட்டக்கலைத் துறை சார்பில் 2 பேருக்கும், வேளாண்மைத்துறை சார்பில் 10 பேருக்கும், தமிழ் நிலம் திருத்தம் தொடர்பாக 18 பேருக்கும் என மொத்தம் 197 பயனாளிகளுக்கு ரூ.26 லட்சத்து 93 ஆயிரத்து 252 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

முகாமை முன்னிட்டு பொதுமக்களிடம் இருந்து 199 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 192 மனுக்கள் ஏற்கப்பட்டன. மேலும், முகாம் நடைபெற்ற நாளில் மாவட்ட ஆட்சியர் பொதுமக்களிடம் இருந்து 72 கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக்கொண்டார். பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். முன்னதாக, மாவட்ட ஆட்சியர் மரக்கன்றுகளை நட்டு வைத்து, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசு திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தலைமையில் 'போதையில்லா தமிழ்நாடு' உறுதிமொழியை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், செய்யாறு சார் ஆட்சியர் எல்.அம்பிகா ஜெயின், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) இளவரசன், வெம்பாக்கம் வட்டாட்சியர் துரை மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நிலத்தடி நீர் குறைந்து வருகிறது; பொதுமக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் - ஆட்சியர் வந்தனா கார்க்

செய்யாறு, ஆக. 20:

திருவண்ணாமலை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், பொதுமக்கள்தண்ணீரைவீணாக்காமல்சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

செய்யாறு அருகே வெம்பாக்கம் வட்டம் மாமண்டூர்பகுதியில்மாவட்டநிர்வாகத்தின் சார்பில் மக்கள் தொடர்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வெம்பாக்கம் வட்டாட்சியர் துரை வரவேற்புரையாற்றினார். செய்யாறு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு அரங்குகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து பொதுமக்களிடம் பேசிய அவர், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, தண்ணீரை சிக்கனமா



கவும் முறையாகவும் பயன்படுத்த வேண்டும் என்றார்.மேலும், போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் உடல்நலம் மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திய ஆட்சியர், போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியை பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்டார்.

சாலைப் பாதுகாப்பு குறித்தும் ஆட்சியர் முக்கிய அறிவுரைகளை வழங்கினார். இரு சக்கர வாகனங்களில் பயணம் செய்யும் போது கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என்றும், தலைக்கவசம் அணியாமல் செல்வதால் விபத்து நேரங்களில் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்தார். எனவே, வாகன ஓட்டிகள் போக்குவரத்து விதிகளை முறையாக கடைப்பிடித்து பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மக்கள் தொடர்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் 192 பயனாளிகளுக்கு ரூ.24 லட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இதில் குடும்ப அட்டை, பட்டா, விபத்து இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஊசாம்பாடி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நின்று செல்ல வலியுறுத்தி கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை, ஆக. 20:

திருவண்ணாமலை–வேலூர் சாலையில் உள்ள ஊசாம்பாடி பேருந்து நிலையத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் முறையாக நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊசாம்பாடியைச் சுற்றியுள்ள 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் தினந்தோறும் ஊசாம்பாடி பேருந்து நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், திருவண்ணாமலை–வேலூர் சாலையில் இயக்கப்படும் பல அரசு மற்றும் தனியார் பேருந்துகள் ஊசாம்பாடி பேருந்து நிலையத்தில் நிற்காமல் செல்வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

இதனால், வேலைக்குச் செல்வோர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருப்பதுடன், அடுத்த பேருந்து நிலையங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். எனவே, ஊசாம்பாடி பேருந்து நிலையத்தில் அனைத்து வழித்தட பேருந்துகளும் நின்று செல்ல உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கண்டன கோஷங்களை எழுப்பினர்.




தொடர்ந்து, தங்களது கோரிக்கையை வலியுறுத்தி மண்டல போக்குவரத்து அலுவலகம் நோக்கி நடைபயணம் செல்ல போராட்டக்காரர்கள் முயன்றனர். அப்போது சிலர் திடீரென சாலை மறியலில் ஈடுபட முயன்றதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஊசாம்பாடி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நின்று செல்ல உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, போராட்டக்காரர்கள் சாலை மறியல் முயற்சியை கைவிட்டனர். பொதுமக்களின்போக்குவரத்துதேவையை கருத்தில் கொண்டு, ஊசாம்பாடி பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் முறையாக நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் தொடர்ந்து வலியுறுத்தினர்.

# தங்கவயல் மக்களுக்காக சட்டப்பேரவையில் குரல் கொடுத்த ரூபகலா ஷஷிதர்

## ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா?

தங்கவயல்,ஆக.20

தங்கவயல் மக்களின் அன்றாட பிரச்சினைகளை சட்டப்பேரவை வரை கொண்டு சென்று, அவர்களின் கோரிக்கைகளுக்காக குரல் கொடுத்து வருகிறார் தங்கவயல் சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா ஷஷிதர்.







அந்த வகையில், தற்போது தங்கவயல் மற்றும் கே.ஜி.எஃப். தாலுகா பகுதிகளில் ஒய்வூதியம் நிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள ஓய்வூதியதாரர்களின் பிரச்சினையை சட்டப்பேரவை கூட்டத்தொடரில் அரசு கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக அரசு சார்ந்த ஓய்வூதியத்தை நம்பி வாழ்ந்து வரும் முதியவர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, திடீரென ஓய்வூதியம் கிடைக்காமல் போவது அவர்களின் அன்றாட வாழ்க்கையில் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. உணவு, மருந்து, குடும்பச் செலவுகள் உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கே ஓய்வூதியத்தை நம்பியிருக்கும் நிலையில், பணம் நிறுத்தப்படுவதால் அவர்கள் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். இந்த நிலையில், கே.ஜி.எஃப். தாலுகாவில் ஓய்வூதியம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டு வரும் பல்வேறு ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளை சட்டப்பேரவை கூட்டத்தொடரில் எடுத்துரைத்துள்ளார் ரூபகலா ஷஷிதர்.

"ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளவர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்த்து, அவர்களுக்கு மீண்டும் ஓய்வூதியம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அரசிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒரு தொகுதி மக்களின் பிரச்சினை என்பதை சட்டமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு வரும்போது, அந்த பிரச்சினைக்கு நிர்வாக ரீதியான தீர்வு கிடைக்க நடவடிக்கை எடுப்பதும் முக்கியமானதாகும்.

அதிலும் குறிப்பாக, வயதான ஓய்வூதியதாரர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய பிரச்சினை என்பதால், இதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தங்கவயல் தொகுதியில் சாலை, குடிநீர், மின்சாரம், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் பிரச்சினைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது ஓய்வூதியதாரர்களின் பிரச்சினையும் சட்டப்பேரவையில் குரலாக ஒலித்துள்ளது. தங்கவயல் மக்களின்குரல்சட்டப்பேரவை வரை சென்றிருக்கிறது. ஓய்வூதியம் கிடைக்காமல் தவிக்கும் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே இந்த கோரிக்கையின் முக்கிய நோக்கமாக பார்க்கப்படுகிறது.

ஓய்வூதியம் என்பது வெறும் மாதாந்திர தொகை அல்ல. பல குடும்பங்களுக்கு அது அவர்களின் வாழ்க்கையின் முக்கிய ஆதாரம். எனவே, எந்த காரணத்தால் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்தாலும், தகுதியான பயனாளர்களின் விவரங்களை அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்து, பிரச்சினையை விரைந்து தீர்க்க வேண்டும்.

தங்கவயல் சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா ஷஷிதர் இந்த பிரச்சினையை சட்டப்பேரவையில் எடுத்துரைத்துள்ள நிலையில், இனி அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதே ஓய்வூதியதாரர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

"தங்கவயல் மக்களின் பிரச்சினை எதுவாக இருந்தாலும், அது சட்டப்பேரவை வரை சென்றடைய வேண்டும்; அதற்கு தீர்வு கிடைக்க வேண்டும்" என்ற நோக்கில், மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. நிறுத்தப்பட்ட ஓய்வூதியம் மீண்டும் வழங்கப்பட்டு, தகுதியான அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் உரிய பயன் கிடைத்தால், இந்த சட்டப்பேரவை முயற்சி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய நிம்மதியை அளிக்கும்.

தங்கவயல் மக்களின் பிரச்சினையை சட்டப்பேரவையில் எழுப்பிய ரூபகலா ஷஷிதரின் கோரிக்கை — அரசின் நடவடிக்கையை எதிர்நோக்கும் ஓய்வூதியதாரர்கள்!

# போதைப்பொருள், POCSO மற்றும் சைபர் குற்றங்கள் குறித்து ஆவடி காவல்துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஆவடி, ஆகஸ்ட் 20:

ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் தலைமையில், ஆவடி காவல் ஆணையரக இணை காவல் ஆணையாளர் மருத்துவர் இரா.சிவகுமார், காவல் துணை ஆணையாளர்கள், மாவட்ட கல்வி அலுவலர், காவல் உதவி ஆணையாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு, ஆவடி காவல் ஆணையரகம் சார்பில் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆவடி எஸ்.எம். நகர் காவல் கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஆவடி காவல் ஆணையாளர் மற்றும் காவல் அதிகாரிகளால் மாணவர்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாப்பது. போதைப்பொருட்களின் தீமைகள் மற்றும் அவற்றைத் தடுப்பதில் ஆசிரியர்களின் பங்கு குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மாணவர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் வகையில் POCSO சட்டம், மாணவர்களின் பாதுகாப்பு, சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளை உடனடியாகத் தெரிவிப்பது மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு மற்றும் ஆதரவு குறித்தும் விழிப்பு ணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதேபோல், சைபர் குற்றங்கள், ஆன்லைன் மோசடிகள், சமூக வலைதளங்களை பாதுகாப்பாகப் பயன்படுத்துதல். போலியான இணைப்புகள் மற்றும் OTP களை பகிர்வதால் ஏற்படும் அபாயங்கள், தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பது உள்ளிட்டவை குறித்தும் ஆசிரியர்களுக்கு விளக்கப்ப ட்டது.






மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்காற்றுவதால், போதைப்பொருள் பயன்பாடு, பாலியல் துன்புறுத்தல் அல்லது சைபர் குற்றங்கள் தொடர்பான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக பெற்றோர் மற்றும் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்பானமற்றும்போதைப்பொருள்இல்லாத எதிர்காலத்தை உறுதி செய்யும் நோக்கில், ஆவடி காவல் ஆணையரகம் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சியில், 334 பள்ளிகளை சேர்ந்த ஆசிரியர்கள், 58 கல்லூரிகளை சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என சுமார் 650 பேர் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே எரியோடு காவல்துறை எல்லைக்குட்பட்ட வரப்பட்டியில் ஜோதிமணி என்பவரது வீட்டில் பட்டப்பகலில்சுமார்பத்துபவுன்தங்கநகைகொள்ளை அடிக்கப்பட்டது சம்பவம் அப்பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தியது .தகவல் அறிந்து விரைந்து வந்த வேடசந்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் சுரேஷ் பாண்டியன் தலைமையான எரியோடு காவல்துறையினர் கொள்ளை சம்பவம் நடைபெற்ற இடத்தை ஆய்வு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழக வெற்றிக்கழக அரசின் 100 நாள் ஆட்சியை முன்னிட்டு

# மாதவரம் சட்டமன்ற விஜய் பிரபு எம்எல்ஏ நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்





செங்குன்றம், ஆகஸ்ட் 20:

தமிழக வெற்றி கழக அரசு அமைந்து நூறு நாட்கள் ஆனதை தொடர்ந்து அதனை கொண்டாடும் விதமாக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி சார்பில் கழக அரசின் 100 நாள் ஆட்சியை முன்னிட்டு மாதவரம் சட்டமன்ற அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்டச் செயலாளருமான எம்.எல்.விஜய் பிரபு, இரண்டு நபர்களுக்கு ஆட்டோ, இரண்டு நபர்களுக்கு மூன்று சக்கர மிதிவண்டி, 3 பெண்களுக்கு தையல் இயந்திரம் மற்றும் தூய்மைக் காவலர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழக மாவட்ட, பகுதி, வட்ட, பேரூர், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய எம்எல்ஏ விஜய் பிரபு, தமிழக முதல்வர் விஜய் என்ற ஒரு முகத்திற்காக கிடைத்த வெற்றி இது எனவும், 100 நாட்கள் அல்ல இன்னும் இருபது ஆண்டு காலத்திற்கு தமிழக வெற்றிக் கழக ஆட்சியே தொடரும் எனவும், மக்கள் பயனடையும் திட்டங்களை தவெக அரசு செய்யும் என உற்சாகமாக பேசினார்.

## மாதவரத்தில்

# சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட் கிளை திறப்பு விழா





செங்குன்றம், ஆகஸ்ட் 20:

மாதவரம் புதிய பேருந்து நிலையம் எதிரில் சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்இன் கிளை திறப்பு விழாவிற்கு மாதவரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை தாங்கி குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக பிரதிநிதி என்.எஸ். மணி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்அருண்ராஜ், சென்னை வடகிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீனிவாசன்மற்றும்வங்கி நிர்வாகத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உயர்தர தொழில்சார் சேவைகளைப் பெற மகளிர் தொழில் முனைவோருக்கு அரிய வாய்ப்பு

## தகுதியான மகளிர் தொழில் முனைவோரை தேர்வு செய்ய 25ஆம் தேதி சிறப்பு முகாம்

திருவண்ணாமலை, ஆக. 20

தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான "வாழ்ந்து காட்டுவோம்" திட்டத்தின் கீழ், மகளிர் தொழில்முனைவோருக்கு உயர்தர தொழில்சார் சேவைகளை வழங்குவதற்கான தகுதியான மகளிர் தொழில் முனைவோர்களை கண்டறிந்து தேர்வு செய்யும் சிறப்பு முகாம், திருவண்ணாமலையில் வரும் 25.08.2026 அன்று நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரசின் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம், ஊரக மகளிரின் தொழில் முனைவுகளை மேம்படுத்துதல், நிதிச் சேவைகள், வேலை வாய்ப்பு உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தொழில் சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டம் 6 வட்டாரங்களில் உள்ள 308 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் புதிதாக தொழில் தொடங்க விரும்புவோர் மற்றும் ஏற்கனவே தொழில் செய்து வரும் தொழில் முனைவோருக்கு தேவையான தொழில் பதிவு,

தொழில் திட்டம் தயாரித்தல், வங்கிக் கடன் பெற்றுத் தருதல் உள்ளிட்ட அடிப்படை தொழில் சேவைகள், "மதி சிறகுகள் தொழில் மையம்" மூலம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடையும் நிலையில், அவற்றை வெற்றிகரமாக நிலைநிறுத்தி அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல சந்தைப்படுத்துதல், பிராண்டிங், பேக்கேஜிங், சந்தை இணைப்புகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, தரநிலைப்படுத்துதல், தொழில்நுட்பம், இயந்திரமயமாக்கல், தொழில் சார்ந்த புதுமை யுக்திகள் மற்றும் நிதிச் சேவைகள் உள்ளிட்ட பல்



வேறு உயர்தர சேவைகள் தேவைப்படுகின்றன. இதுபோன்ற சிறப்பு சேவைகள் குறிப்பாக கிராமப்புற மகளிர் தொழில் முனைவோருக்கு எளிதில் கிடைப்பதில்லை.

பல்வேறு சமூக மற்றும் பொருளாதார காரணங்களால் இச்சேவைகளைப் பெறுவதிலும் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மகளிர் தொழில் முனைவோர் தங்களது தொழில்களை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்லத் தேவையான அனைத்து உயர்தர தொழில்சார் சேவைகளையும் ஒரே இடத்தில் பெறும் வகையில், தகுதியான மகளிர் தொழில் முனைவோர்களை அடையாளம் கண்டு தேர்வு செய்யும் சிறப்பு முகாம் 25.08.2026 அன்று New GDP Hallல் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் நடைபெறுகிறது.

புத்தொழில் நிறுவன ங்களைத் தொடங்க ஆர்வம், திறமை மற்றும் புதிய யுக்திகளைக்கொண்டுள்ள மகளிர் தொழில் முனைவோர்களும், ஏற்கனவே தொழில் நிறுவனங்களை தொடங்கி வெற்றிகரமாக நடத்தி, அடுத்தகட்ட வளர்ச்சியை எதிர்நோக்கியுள்ள மகளிர் தொழில் முனைவோர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழில் முனைவோர் அனைவரும் இந்த சிறப்பு முகாமில் தவறாமல் கலந்து கொண்டு, தங்களது தொழில் வளர்ச்சிக்கான உயர்தர சேவைகளைப் பெற்று பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

முகாமில் கலந்து கொள்ள விரும்புவோர் 24.08.2026க்கு முன்பாக கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடுஊரகபுத்தாக்கத் திட்ட மாவட்ட செயல் அலுவலர் முனைவர் எஸ். தமிழ்மாறன் அவர்களை 8098724555 என்ற எண்ணிலோ அல்லது 04175 290119 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

# அரசு பேருந்தின் டிஜிட்டல் போர்டில் 'சீனா' பெயர்: பயணிகள் குழப்பம்

## உடனடியாக சுற்றறிக்கை அனுப்ப சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

தேனி,ஆக.20

தேனி பேருந்து நிலையத்தில் நிற்கும் அரசு பேருந்தின் மின்சார இலக்குப்பலகையில் 'China' என ஆங்கிலத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது பயணிகளிடையேயும் சமூக வலைத்தளங்களிலும் பெரும் குழப்ப த்தையும் நகைப்பையும் ஏற்படுத்தியுள்ளது.தேனியிலிருந்து பெரியகுளம் மற்றும் மதுரை செல்லும் அரசு பேருந்தில், வழித்தட பெயரை துல்லியமாகக் காட்ட வேண்டிய LED டிஜிட்டல் பலகையில் 'China' என்ற பெயர் வெளிவந்துள்ளது. வழக்கமாக இத்தகைய மின்சார பலகைகள் மென்பொருள் மற்றும் மின்சுற்று தொழில்நுட்பம் மூலம் இயங்குபவையாகும். அவற்றில் ஏற்படும் மென்பொருள் பிழைகள் அல்லது சரியான பராமரிப்பின்மை காரணமாகவே இதுபோன்ற முறையற்ற சொற்கள் திரையில் தோன்றுகின்றன.

எனினும், இத்தகைய தொழில்நுட்ப கோளாறுகளை உடனுக்குடன் கண்டறிந்து சரி செய்யாமல், பொதுவெளியில் பேருந்துகளை இயக்குவது அரசுப் போக்குவரத்து துறையின் செயல்திறன் குறித்து பொதுமக்கள் மத்தியில் அவப்பெயரை ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டின் ஒரு மாவட்டத்திலிருந்து சீனாவுக்கு பேருந்து இயக்கப்படுகிறதா என்ற நக்கலான கேள்விகளோடு சமூக ஆர்வலர்களும், பயணிகளும் இதை கடுமையாக விவாதித்து வருகின்றனர்.




இப்பிரச்சனை தேனி மாவட்டத்தில் மட்டுமல்லாது, மாநிலத்தின் பல்வேறு பணிமனைகளுக்கு சொந்தமான பேருந்துகளிலும் அவ்வப்போது எதிரொலித்து வருகிறது. எனவே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து போக்குவரத்து பணிமனை மேலாளர்களுக்கும் தெளிவான சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். பழுதடைந்த மற்றும் பிழையான மென்பொருள் பலகைகளை உடனடியாக நீக்கம் செய்து, முறையான புதிய டிஜிட்டல் பலகைகளை பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் பொதுமக்களின்குழப்பங்களைதவிர்ப்பதோடு, அரசு துறை மீதான நம்பகத்தன்மையையும் காக்க முடியும் என்பதே சமூக ஆர்வலர்களின் முதன்மையான கோரிக்கையாகும்.

## திண்டுக்கல்லில்

# பெண்ணிடம் 42 பவுன் நகைகள், ரூ.34 லட்சம் மோசடி வாலிபர் கைது



திண்டுக்கல் மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டியை சேர்ந்த சின்னச்சாமி மகள் நந்தினி(28) இவரின் பள்ளி கால தோழியான வேடப்பட்டியை சேர்ந்த நாகலட்சுமி, அண்ணன் உறவுமுறையான சங்கரன்கோவிலை சேர்ந்த முத்துராமானுஜம் (32) திருமணத்திற்காக நந்தினியை பெண் கேட்கின்றனர், என கூறி நம்பிக்கையை ஏற்படுத்தி விபத்தில் முத்துராமானுஜம் அடிபட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் உள்ளார். என்று கூறி பல்வேறு தவணைகளில் மொத்தம் ரூ.34 லட்சம் ரொககம், 42 பவுன்தங்க நகைகளை பெற்றுக் கொண்டு மோசடி செய்ததாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அவர்களிடம் அளித்த புகாரை தொடர்ந்து மாவட்ட குற்றப்பிரிவு DSP. குமரேசன் தலைமையிலான போலீசார் விசாரணை மேற்கொண்டுமுத்துராமானுஜத்தை கைது செய்தனர்.

மேலும் தலைமறைவாக உள்ள நாகலட்சுமி, முத்துலட்சுமியை தேடி வருகின்றனர்

## அனைத்து துறைகளின் பணிகள் குறித்து

# வெம்பாக்கம் வட்டாரத்தில் அங்கன்வாடி, பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம், ஆவின் நிலையம், நியாய விலைக் கடை உள்ளிட்ட இடங்களில் கலெக்டர் வந்தனா கார்க் நேரில் ஆய்வு

திருவண்ணாமலை, ஆக. 20

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் வட்டாரத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின்தரம்குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் இன்று (19.08.2026) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

வெம்பாக்கம் வட்டத்திற்குட்பட்ட மாமண்டூர் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர், குழந்தைகளின் கற்றல் மற்றும் வாசிப்புத் திறன், எடை மற்றும் உயரம் உள்ளிட்ட வளர்ச்சி குறித்த விவரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், குழந்தைகளின் வருகைப் பதிவேடு முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாமண்டூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்ட அவர், மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

ஆசிரியர்கள் முறையாக பாடம் கற்பிக்கிறார்களா, பள்ளியில் வழங்கப்படும் சத்துணவு தரமாகவும் சுவையாகவும் உள்ளதா என்பது குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், பள்ளியில் செயல்பட்டு வரும் சத்துணவு மையத்தின் செயல்பாடுகள், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் அவற்றின் தரம் குறித்தும் ஆய்வு செய்தார்.

ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு

மாமண்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர், மருத்துவமனையின் செயல்பாடுகள், மருந்துகளின் இருப்பு மற்றும் பிரசவ சேவை மையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, மாமண்டூரில் உள்ள ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் குளிரூட்டப்படும் நடைமுறை, பால் கொள்முதல் மற்றும் உற்பத்தி தொடர்பான விவரங்களை பார்வையிட்டார். மேலும், பால் கொள்முதல் மற்றும் உற்பத்தி விவரங்கள் முறையாக பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்.

நியாய விலைக் கடை, வேளாண் பணிகளும் ஆய்வு

மாமண்டூர் நியாய விலைக் கடையில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர், அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு, பொருட்கள் தரமான முறையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறதா, பொருட்கள் வழங்கிய விவரங்கள் பதிவேடுகளில் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாமண்டூர் பகுதியில் வேளாண்மைத் துறை சார்பில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தின் கீழ், விவசாயியின் நிலத்தில் நவீன இயந்திரம் மூலம் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ரூ.45 லட்சத்தில் சுகாதார துணை மையம்

இதனைத் தொடர்ந்து, வெம்பாக்கம் வட்டத்திற்குட்பட்ட மாங்கால் ஊராட்சியில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய சுகாதார துணை மையக் கட்டிடப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், மாமண்டூர்–தூசி சாலை அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர், சாலை முறையாகவும் தரமாகவும் அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது செய்யாறு சார் ஆட்சியர் எல். அம்பிகா ஜெயின், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், வெம்பாக்கம் வட்டாட்சியர் துரை மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# நாகாத்தம்மன் நகர் ஸ்ரீ நாகாத்தம்மன், ஜடா முனீஸ்வரர், பறாவக் காளியம்மன் புற்றுக்கோயில் ஆடிமாத 27ஆம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 1ஆம் ஆண்டு தீமிதி திருவிழா

செங்குன்றம், ஆகஸ்ட் 20:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி நாகாத்தம்மன் நகர் அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன், ஜடா முனீஸ்வரர், பறாவக் காளியம்மன் புற்றுக்கோயில் ஆடிமாத 27ஆம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 1ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய தலைவர் வீரையா,





செயலாளர் ரவிக்குமார், பொருளாளர் சுப்பிரமணி, கௌரவத்தலைவர் வெங்கடேசன், உபதலைவர் கிருஷ்ணன், கௌரவ ஆலோசகர் சந்திரபோஸ், இணைத்தலைவர்கள் ரமேஷ், சிவா, இணை செயலாளர்கள் குமார், அருணாச்சலம், கணக்கு தணிக்கையாளர் வினோத்குமார், துணைத் தலைவர்கள் சங்கர், ராஜேஷ், துணை செயலாளர்கள் பாலமுருகன், கண்ணன், செயற்குழு பொறுப்பாளர்கள் முரளி, செந்தில், விழாகுழு ஒருங்கிணைப்பாளர்கள் வசந்த், நித்தியானந்தம் மற்றும் கிராம பொதுநலச்சங்கதலைவர் கணேசன், செயலாளர் தம்ராஜ், பொருளாளர் சுரேஷ், கௌரவ செயற்குழு உறுப்பினர் சாலமன், கௌரவத்தலைவர் சந்திர போஸ், கௌரவ ஆலோசகர் வெங்கடேசன், உபதலைவர் வீரையா, இணைத்தலைவர் அன்பு, இணை செயலாளர் முனியாண்டி, கணக்கு தணிக்கையாளர் வினோத்குமார், துணைத்தலைவர் அப்துல் லத்தீப், துணை செயலாளர் ரவிக்குமார், ஒருங்கிணைப்பாளர் சிவா உள்ளிட்ட ஆலய மகளிர் குழுவினர்கள், கமிட்டி குழுவினர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், பந்தகால்நடுதல், பால்குடம் எடுத்தல், தாய் வீட்டுசீர் எடுத்தல், கங்கைநீர்திரட்டுதல், கூழ்வார்த்தல், முளைப்பாரி எடுத்தல், அக்னி கப்பரை எடுத்தல் மற்றும் சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் போன்றவை நடைபெற்றது.

காப்புகட்டிய 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளவானவேடிக்கையுடன் திருவீதி உலாநடைபெற்றது.





## கருங்குளம் வடக்கு ஒன்றிய வல்லநாட்டில்

# சிறு குறு தொழில்துறை அமைச்சர் மதன் ராஜா பிறந்தநாளை முன்னிட்டு தவெகவினர் பொதுமக்களுக்கு லட்டு வழங்கி சிறப்பாக கொண்டாடினர்

தூத்துக்குடி ஆக 20

கருங்குளம் வடக்கு ஒன்றிய தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளர் சிறுகுறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜாவின் 42 வது பிறந்த நாளை முன்னிட்டு கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் ஏற்பாட்டில் பார்வதி அம்மன் கோவிலில் மற்றும் தம்பிராட்டியம்மன் கோவிலில் அமைச்சர் மதன் ராஜா சிறப்புடன் வாழ வழிபாடு செய்தபின்பு இணைச்செயலாளர்மாரியப்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அங்கப்பன் வல்லநாடு தவெக கிளைச்செயலாளர் வேல்முருகன், சுப்புலட்சுமி, விக்னேஷ், ஒன்றிய இணை அமைப்பாளர் கனகா, ஆகியோர் வல்லநாடு பகுதி பொதுமக்களுக்கு லட்டு இனிப்பு வழங்கினர்





## செங்குன்றத்தில்

# ஸ்ரீ லட்சுமி அம்மன் கோயில் தீமிதி திருவிழா

செங்குன்றம், ஆகஸ்ட் 20:

மாதவரம் தொகுதி செங்குன்றம் பேரூராட்சியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ லட்சுமி அம்மன் திருக்கோயில் தீ மிதி திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 400க்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை நிறைவேற்றினர். ஸ்ரீ லட்சுமி அம்மன் கோயில் கிராம பொதுமக்கள், நண்பர்கள் சார்பில் பூக்குழியை மிகச் சிறப்பாக வடிவமைத்திருந்தனர். இதுமட்டுமல்லாமல் ஸ்ரீ லட்சுமி அம்மன் கோயில் தெரு பொதுமக்கள், நண்பர்கள் சார்பில் 5000 பேருக்கு அன்னதானமும் இன்னிசைக் கச்சேரி நிகழ்வையும் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது பொதுமக்களிடைடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்வுகளில் ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம், குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.

# விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் அன்னதானம், நலத்திட்ட உதவிகள்






செங்குன்றம், ஆகஸ்ட் 20:

மாதவரம்தொகுதிபுழல்ஒன்றியம்விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் தேவ பர்வதம் ஜெபக்குழு சாரா சம்பத் குமார் சார்பில் இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தேவ பர்வதம் ஜெபக்குழுவின் நிர்வாகி ஜெயந்தி ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக புழல் ஒன்றிய திமுக முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் புழல் பெ. சரவணன், விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பாரதிசரவணன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம், புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் வழக்கறிஞர் பரிமளசெல்வம் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## TANFINET இணையதள போர்டல் மீண்டும் திறப்பு:

# மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு: நிதித் தகுதி ரூ.20 லட்சமாக தளர்வு

## ஆரணி, செய்யாறு வருவாய் கோட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

திருவண்ணாமலை, ஆக. 20

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) சார்பில், பாரத் நெட் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களுக்கு உயர் தர இணைய சேவைகளை வழங்குவதற்காக மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்களை (District Level Franchisee Partners – DLFP) தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான விண்ணப்பதாரர்களின் நிதித் தகுதி விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். கடந்த 01.01.2026 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், பல்வேறு பகுதிகளில் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, அதிகளவிலான விண்ணப்பதாரர்கள் பங்கேற்கும் வகையில் நிதித் தகுதி விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக விண்ணப்பதாரர்களின் கடந்த மூன்று நிதியாண்டுகளின் சராசரி ஆண்டு வருவாய் ரூ.50 லட்சம் மற்றும் அதற்கு மேல் இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த நிதித்தகுதி ரூ.20 லட்சம் மற்றும் அதற்கு மேல் என தளர்த்தப்பட்டுள்ளது.

37 மாவட்டங்களிலும் தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு

தமிழ்நாட்டில் பாரத் நெட் திட்டப்பணிகள் தற்போது சுமார் 96 சதவீதம் நிறைவடைந்துள்ளன. மாநிலத்தின் 37 மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 2 தொழில் பங்கீட்டாளர்களை தேர்வு செய்து, கிராமப்புற மக்களுக்கு தடையில்லா இணைய சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு மாவட்டமும் வருவாய் கோட்டத்தின் அடிப்படையில் 2 முதல் 6 வட்டாரங்களை உள்ளடக்கிய துணைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அந்தந்த துணைப்பிரிவுகளுக்கு தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 3 வருவாய் கோட்டங்களில் தற்போது ஆரணி மற்றும் செய்யாறு வருவாய் கோட்டங்களுக்கு தொழில் பங்கீட்டாளர்களுக்கான விண்ணப்பங்கள் திறக்கப்பட்டுள்ளன.

ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சமாக 2 மாவட்டங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் நிறுவனம் அல்லது தனிநபர் செயல்படும் மாவட்டம் மற்றும்/அல்லது அவர்களின் முகவரி அமைந்துள்ள மாவட்டங்களில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். தொழில் பங்கீட்டாளர்களின் முக்கியப் பொறுப்புகள் தேர்வு செய்யப்படும் தொழில் பங்கீட்டாளர்களின் முக்கியப் பொறுப்புகளில் Optical Fibre Cable (OFC), Optical Network Terminal (ONT) பராமரிப்பு, தடையில்லா இணைய சேவை வழங்குதல், சேவைத் தடைகளை விரைவாக சரிசெய்தல், Service Level Agreement (SLA) விதிமுறைகளைபின்பற்றுதல் மற்றும் சேவைத் தரத்தை பராமரித்தல் ஆகியவை அடங்கும். TANFINET விண்ணப்பப் பதிவு நடைமுறை அதன் இணையதள போர்டல் மூலம் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் அறிவிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்து, தேவையான ஆவணங்களைப் பதிவேற்றம் செய்து, தாங்கள் செயல்பட விரும்பும் துணைப்பிரிவைத் தேர்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு துணைப்பிரிவுக்கும் ரூ.25,000 திரும்பப்பெறக்கூடிய, வட்டியில்லா விண்ணப்பப் பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்த வேண்டும். தேர்வு செய்யப்படும் பங்கீட்டாளர்கள், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ.2 லட்சம் பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்திய பின்னர் TANFINET தலைமையகத்தால் பணி ஆணை வழங்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்து கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரர்கள், அதே வருவாய் உட்கோட்டத்திற்கு மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. இருப்பினும், அதே மாவட்டத்தில் உள்ள பிற துணைப்பிரிவுகளுக்கு அவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு TANFINET உதவி மைய எண்ணான 04424965595 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இந்த விண்ணப்பங்களுக்கான TANFINET இணையதள போர்டல் 20.08.2026 முதல் மீண்டும் செயல்பட உள்ளது. எனவே, தகுதியும் ஆர்வமும் உள்ள விண்ணப்பதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.





மக்கள் தலைவர் ஐயா ஜிகே மூப்பனார் அவர்களின் 95 வது பிறந்த நாளை முன்னிட்டு, பழனி மயில் ரவுண்டானா அருகில், அவரின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தொடர்ந்து இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு நகரத் தலைவர் சண்முகநாதன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் ராசியப்பன், மாநில செயலாளர் வழக்கறிஞர் மணிகண்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் கனகசபாபதி, பிடிசிநாகராஜன், மாவட்ட இளைஞரணி தலைவர் சௌந்தர பாண்டியன், பாலசுப்பிரமணியம், நாகேஸ்வரன், வட்டாரதலைவர்கள் ராஜேந்திரன், சுந்தரராஜ், நகரதுணைத்தலைவர் திருஞானசம்பந்தம், கோபால், நகர செயலாளர் மாரியப்பன், நகர பொருளாளர் பாஸ்கரன், பாலசமுத்திர பேரூர் தலைவர் ராமு, நெய்க்காரப்பட்டி பேரூர் தலைவர் சண்முகவேல், ஆயக்குடி பேரூர் தலைவர் நாட்டுதுரை, கீரனூர் பேரூர் தலைவர் காட்டப்பன், ரூக்குவார் பட்டி செல்வம், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சிவசுப்பிரமணி, மாவட்ட செயலாளர் அருண் வீரபாண்டி, எம் காளிமுத்து உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# சின்னமனூர் அருகே குருவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டி

## 30க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பங்கேற்பு

தேனி, ஆக.20

தேனி மாவட்டம், சின்னமனூர் அருகிலுள்ள ஓடைப்பட்டி நந்தகோபால் ஆரம்பப்பள்ளியில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான குருவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டிகளை ஆசிரியர் பயிற்றுனர் திரு. செல்வம் அவர்கள் முன்னின்று வழிநடத்தினார். இதில் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். பல்வேறு பள்ளிகளை சேர்ந்த ஆசிரியர்கள் இந்நிகழ்வில் போட்டி வழிநடத்துனர்களாகவும், நடுவர்களாகவும் செயல்பட்டு போட்டிகளை சீரிய முறையில் நடத்தினர். இந்நிகழ்வு குறித்து ஆசிரியர் திரு. ஜோசப் அவர்கள் கூறுகையில், "அரசாங்கம் நடத்தும் இதுபோன்ற கலைத்திருவிழா போட்டிகள் தொடக்கப்பள்ளி மாணவர்களின் ஒளிந்திருக்கும் கலை நுணுக்கங்களையும், படைப்பாற்றல் அறிவையும் வெளிக்கொணரக்கூடிய அருமையான



தொருவாய்ப்பாகும். இளம் வயதிலேயே இதுபோன்ற தளங்கள் அமைத்து தரப்படுவதால் குழந்தைகளின் கற்பனை திறனும், கல்வித் திறனும் பெருமளவில் அதிகரிக்கும். மேலும், அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தி, கலை ஆர்வத்தை வளர்க்க அரசு எடுக்கும் இந்த முயற்சி மிகவும் பாராட்டுக்குரிய ஒரு பொன்னான வாய்ப்பாகும்" எனத் தெரிவித்தார். மாணவர்களின் கலைத்திறனை ஊக்குவிக்கும் வகையில் அமைந்த இப்போட்டிகள் அனைத்து தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்று இனிதே நிறைவடைந்தன.

திண்டுக்கல் குமுளி தேசிய நெடுஞ்சாலையில் தொடரும் மரண அவலம்:

# ஆக்கிரமிப்புகள், புறவழிச்சாலை திட்ட சுணக்கத்தால் பறிபோகும் அப்பாவி உயிர்கள்

## மாவட்ட ஆட்சியரும் தேசிய நெடுஞ்சாலைத் துறையும் உடனடியாக தலையிட 'தேசபக்தி' நாளிதழ் விரிவான அறிக்கை

**தேனி,ஆக.20**

தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே அமைந்துள்ள சீலையம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட திண்டுக்கல் குமுளி தேசிய நெடுஞ்சாலை பகுதி, தற்போது வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் அச்சுறுத்தல் நிறைந்த ஒரு "மரண மண்டலமாக" உருவெடுத்துள்ளது. இப்பகுதியில் கடந்த ஆண்டை போலவே நடப்பாண்டிலும் எண்ணற்ற வீதி விபத்துகள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. இங்கு நிகழும் விபத்துகளில் சுமார் 90 சதவீதம் பேர் பரிதாபமாக தங்கள் உயிரை இழக்கும் கொடூரமும், எஞ்சிய 10 சதவீதம் பேர் மிக கடுமையான காயங்களுடன் பலியாகாமல் தப்பிக்கும் அவலமும் வாடிக்கையாகிவிட்டது. சீலையம்ப ட்டி மட்டுமல்லாது, இந்த தேசிய நெடுஞ்சாலையின் ஒவ்வொரு இணைப்பு புள்ளியிலும் புறவழிச்சாலையிலும் இதேபோன்ற கட்டுப்பாடற்றவிபத்துகள்நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

சீலையம்ப ட்டி நகர்ப் பகுதி முழுவதும் கட்டுப்பாடற்ற ஆக்கிரமிப்புகளின் பிடியில் சிக்கியிருப்பதே இந்த விபத்துகளுக்கு முதன்மை காரணமாகும். கழிவுநீர்கால்வாய்க்குள் 5 அடி தள்ளி வசித்து வந்த நிலைமை மாறி, தற்போது சாக்கடையும் தாண்டி 10 அடிக்கும் மேலாக வீதிகளையே ஆக்கிரமித்து வர்த்தக நிறுவனங்களும் குடியிருப்புகளும் முளைத்து விட்டன. நாளுக்கு நாள் சாலை குறுகிக்கொண்டே செல்வதால், போதிய இடவசதியின்றி வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதும் சூழல் உருவாகிறது.

மேலும், சாலை ஒரே சீராக இல்லாமல் ஒருபுறம் உயர்த்தப்பட்டும் மறுபுறம் தாழ்ந்தும் சாய்வு தளமாக அமைந்திருப்பதும், ஆங்காங்கே அவசரக்கோலத்தில் வைக்கப்பட்டுள்ள முறைசாரா தடுப்பான்களும் (Barricades) விபத்துகளை மேலும் தீவிரப்படுத்துகின்றன. முக்கியமாக, சீலையம்பட்டி வழியாக செல்லும் இந்த போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஏற்கனவே புறவழி ச்சாலை திட்டத்திற்காக (Bypass) நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு விட்டபோதிலும், அத்திட்டத்தை அமல்படுத்துவதில் ஏற்படும் தேவையற்ற காலதாமதமும் சுணக்கமுமே நாளுக்கு நாள் மனித உயிர்கள் பலியாவதற்கு முக்கிய காரணியாக அமைகிறது.

பள்ளி, கல்லூரி மாணவமாணவிகள் மற்றும் முதியவர்கள் சாலையை கடக்க முயலும் ஒவ்வொரு கணமும் மரண பயத்துடனே கடக்க வேண்டியுள்ளது. இப்பிரச்சினையை 'தேசபக்தி' நாளிதழ் பலமுறை தனது செய்திகள் வாயிலாக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றபோதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

மக்கள் நலனில் என்றும் அக்கறை கொண்ட 'தேசபக்தி' நாளிதழ், தீர்வுகிடைக்கும் வரை தன் சமூகக் கடமையை இடைவிடாது தொடரும். எனவே, தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக தலையிட்டு, சீலையம்பட்டி நெடுஞ்சாலை பகுதியை 'அதிக விபத்து ஏற்படும் பகுதி' (Accident Prone / Restriction Zone) என உடனடியாக அறிவிக்க வேண்டும். ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி சாலையை அகலப்படுத்துவதுடன், சமச்சீரான தார்தளம் அமைத்தல், முறையான வேகத்தடைகள், பாதசாரிகளுக்கான நடைபாதை மேடைகள் (Pedestrian Crossings/Over pass), ஒளிரும் மின்விளக்குகள் மற்றும் முறையான பேருந்து நிறுத்தங்களை அமைக்க வேண்டும். மேலும், மாவட்ட நிர்வாகமும் தேசிய நெடுஞ்சாலைத் துறையும் (NHAI) இணைந்து,

நிலுவையில் உள்ள புறவழிச்சாலை திட்ட பணிகளை துரிதப்படுத்தி, பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 'தேசபக்தி' நாளிதழ் சார்பாகவும், அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள்சார்பாகவும் பணிவோடு கோரிக்கை விடுக்கப்ப டுகிறது.




விவசாயிகளுக்கு வழங்கப்படும்...

# மானிய விலை யூரியா உரத்தினை வேறு பயன்பாட்டிற்கோ அல்லது கடத்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்


## தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் எச்சரிக்கை

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 18.08.2026 அன்று பெரியகுளம் வட்டாரம், தென்கரை பிட்1 வருவாய் கிராமத்தில் திருமதி.ச. மதுமிதா, வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) அவர்கள் களப்பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, கைலாசாபட்டி கிராமம் திரு.கணேசன் என்பவரது நிலத்தில் மானியத்தில் வழங்கப்படும் யூரியா மூட்டைகள் வேறு பைகளில் மாற்றி லாரியில் ஏற்றியது தெரியவந்தது. உடனே, தேனி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு), வேளாண்மை அலுவலர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு) தென்கரை, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தென்கரை, காவல் ஆய்வாளர் அவர்களுக்கு உரிய தகவல் அளிக்கப்பட்டு, நேரில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கள ஆய்வில் சம்பவ இடத்தில் வெள்ளை நிற சாக்குகளில் சுமார் 450 எண்கள் அரசு மானியத்தில் வழங்கும் யூரியாவினை தொழில் நுட்பதரம் (Technical Grade) யூரியா உரம் என்ற அச்சிடப்பட்ட சாக்குகளில் அடைக்கப்பட்டு லாரியில் உரம் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு தார்பாயினால்மூடிவைக்கப்பட்டிருந்தது. கிடங்கில் ஆய்வு செய்தபோது காலியாக இருந்த அரசு மானியத்தில் வழங்கும் மஞ்சள் நிற யூரியா சாக்கு பைகள் இருந்தது. மேலும், கிடங்கு உரிமையாளர் திரு.கணேசன் அவர்களை விசாரித்தபோது தினேஷ் என்ற மாடசாமி த/பெ.முருகேசன் என்பவருக்கு கிடங்கினை வாடகைக்கு விடப்பட்டு இருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து தினேஷ் என்ற மாடசாமி த/பெ.முருகேசன் என்பவரை விசாரித்தபோது தேனி, பாரஸ்ட் ரோடு பகுதியைச் சேர்ந்த குமார் என்பவர் மூலம் உர மூட்டைகள் பெற்றதாகவும், குமாருக்கு ஸ்ரீவில்லிப்புத்தூரை சேர்ந்த குருநாதன் என்பவர் சப்ளை செய்ததாகவும். அவ்வாறு சப்ளை செய்யப்பட்ட உரங்களை வருசநாட்டை சேர்ந்த முத்தையா என்பவர் லாரியில் ஏற்றிக் கொண்டு தினேஷிடம் ஒப்படைத்தார் என தெரிவித்தார்.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் யூரியா உர மூட்டைகள் சட்டவிரோதமாக கடத்தப்படுவது அனைவராலும் உறுதி செய்யப்பட்டது. எனவே, இது அத்தியாவசிய பண்டக பொருட்கள் சட்டம் 1955 மற்றும் உரக்கட்டுப்பாட்டுச்சட்டம் 1985 பிரிவு 28 (3)ன்படி சார்பு ஆய்வாளர், தென்கரை காவல் நிலையம் அவர்களிடம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முடக்கம் செய்யப்பட்ட உர மூட்டைகள் மற்றும் லாரி சார்பு ஆய்வாளர், தென்கரை காவல் நிலையம் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேலும், தினேஷ் என்ற மாடசாமி த/பெ.முருகேசன் கூறிய குமார் என்பவரது இடத்திற்கு தேனி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு) வேளாண்மை அலுவலர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு) அவர்கள், தேனி வட்டார உர ஆய்வாளர் திரு. மு.நிவேஷ்,வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மற்றும் திரு.ர.ரா மச்சந்திரன், வேளாண்மை அலுவலர், ஆகியோர் கொண்ட குழு சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.



தகர கொட்டகையில் உரிய உரம் விற்பனை மற்றும் இருப்பு வைப்பதற்கான உரிமம் மற்றும் கொள்முதல் செய்த விபரம் இல்லாமல் 311 எண்கள் கொண்ட மானிய விலை யூரியா மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டது கண்டறியப்பட்டது. சம்பந்தப்பட்ட உர ஆய்வாளர் சார்பு ஆய்வாளர், தேனிகாவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறார்.

தேனி மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவத்திற்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் 1441 மெ.டன் யூரியாவும், 732 மெடன் டிஏபி உரமும், 833 மெ.டன்., பொட்டாஷ் உரமும், 3562 காம்ப்ளக்ஸ் உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. சில்லரை உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு ஆதார் எண் உட்பட முழுமுகவரியுடன் முறையாக பட்டியலிட்டு இரசீது வழங்கி விற்பனை செய்ய வேண்டும். யூரியா உரத்தை பதுக்கல் செய்வதோ, அதிக விலைக்கு விற்பனை செய்வதோ சட்டத்துக்கு புறம்பான தாகும். அவ்வாறு கண்டறியப்பட்டால் அந்த சில்லரைவிற்பனைநிலையத்தின் லைசன்ஸ் உரிமம் (License) நிரந்தரமாக தடை செய்யப்படுவதுடன் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும். உரத்துடன் மற்ற இணைப்பொருட்கள் நுண்சத்துக்கள், உயிரிம ஊக்கிகள் உள்ளிட்ட பொருட்களை வாங்க கட்டாயப்படுத்தக் கூடாது. மீறினால் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# "சின்னமனூர் வாரச்சந்தை திறந்தவெளி மதுக்கூடமான அவலம்" நகராட்சி நிர்வாகம் உடந்தையா?

## கொதிக்கும் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள்

**தேனி,ஆக.20**

தேனி மாவட்டம், சின்னமனூர்நகராட்சி அலுவலகத்தை ஒட்டிய பகுதியில் அமைந்துள்ள வாரசந்தை, வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் மட்டுமே இயங்கி வருகிறது. பல லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அண்மையில்தான் இந்த சந்தைக்குப்புதிய கட்டிடம்கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், கட்டிடம் கட்டப்பட்டு சில காலத்திலேயே ஆங்காங்கே கைப்பிடி சுவர்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளன. கட்டிட பணியில் சரியான முறையில் கலவை பயன்படுத்தப்படாமல் முறைகேடு நடந்துள்ளதோ என்ற சந்தேகத்தை இந்த அவல நிலை ஏற்படுத்தியுள்ளதுடன், முறையான பராமரிப்பும் இன்றி முடங்கி கிடக்கிறது.

இந்த வாரசந்தைக்கு மூன்று பக்கங்களில் பாதைகள் உள்ள நிலையில், ஒரேஒரு பாதையில் மட்டுமே கதவு அமைக்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டு பாதைகளும் எவ்வித தடுப்பும் இன்றி திறந்தவெளியாகவே விடப்பட்டுள்ளன. இதன் காரணமாக, வியாழக்கிழமை சந்தை நடைபெறும் ஒரு நாளை தவிர்த்து, மீதமுள்ள 6 நாட்களும் இது கட்டணமில்லாத திறந்தவெளி மதுபானக்கூடமாகவே செயல்பட்டு வருகிறது. தினமும் காலை 6 மணி முதல் இரவு வரை சட்டவிரோதமாக மது அருந்துவதும், காலி பாட்டில்களை ஆங்காங்கே உடைத்து போட்டு செல்வதும் தொடர்கதையாக உள்ளது. இதனால், புதன்கிழமை மாலையிலேயே பொருட்களை கொண்டு வந்து இறக்கும் வியாபாரிகளும், பொதுமக்களும் பெரும் அச்சத்திற்கு ஆளாகியுள்ளனர். மதுபானம் மட்டுமன்றி, பல்வேறு சமூக விரோத செயல்களின் புகலிடமாகவும் இந்த வளாகம் மாறியுள்ளது. நகராட்சி அலுவலகத்தின் மாடியிலிருந்தோ அல்லது ஜன்னல் வழியாக பார்த்தாலோ தெளிவாக தெரியும் தூரத்தில்தான் இந்தச் சட்டவிரோத செயல்கள் அனைத்தும் தடையின்றி நடக்குகின்றன. நகராட்சி நிர்வாகத்தின் கண்முன்னே இவ்வளவு அத்துமீறல்கள் நடந்தும், அதிகாரிகள்இதைகண்டு கொள்ளாமல் மௌனம் காப்பது ஏன் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இந்த சந்தை உண்மையில் யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது? வாரத்தில் ஒரு நாள் மட்டுமே இயங்கும் சந்தையின் மீதி 6 நாட்கள் கதவுகள் மூடப்படாமல் திறந்தே வைக்கப்படுவதன் பின்னணி என்ன? சமூக விரோத செயல்கள் தடையின்றி நடக்க நகராட்சி நிர்வாகம் மறைமுகமாக ஆதரவு அளிக்கிறதா அல்லது இதற்காக மறைமுகக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுகிறதா என்ற பகிரங்க குற்றச்சாட்டையும்சமூக ஆர்வலர்கள் முன்வைக்கின்றனர். நகராட்சி பணியாளர்கள் அல்லது அதிகாரி களுக்கு உள்ளே வேலை இருந்தால், அனைத்து வழிகளிலும் முறையான கதவுகளை அமைத்து பூட்டி, அதற்கான சாவி நகராட்சி அலுவலக கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். தேவைப்படும்போது மட்டும் திறந்துவிட்டு மீண்டும் பூட்டுவதே முறையான நிர்வாகத்திற்கு அழகாகும். அதை விடுத்து, எவ்வித பயன்பாடும் இன்றி இந்த வளாகத்தை திறந்தவெளியாக போட்டு வைத்திருப்பது சமூக விரோதிகளுக்கு நகராட்சி நிர்வாகமே வழிவகுத்து கொடுப்பது போல் உள்ளது. ஆண்டாண்டு காலமாக தொடரும் இந்த அவலநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தேனி மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட்டு ஆய்வு நடத்த வேண்டும். புதிய கட்டிட கட்டுமானத்தில் நடந்த முறைகேடுகள் குறித்து விசாரிக்கவும், சந்தையின் அனைத்து பாதைகளிலும் உடனடியாக பூட்டுடன் கூடிய இரும்புக் கதவுகளை அமைத்து நகராட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும், இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தீவிர கோரிக்கை விடுத்துள்ளனர்.




செங்குன்றம் அருகே பட்டப்பகலில் தனியார் பள்ளி அருகே

# இருசக்கர வாகனத்தில் வந்த எலக்ட்ரீசியன் சரமாரியாக வெட்டிக்கொலை; கொலை நடந்த மூன்று மணி நேரத்திற்குள் குற்றவாளிகளை கைது

## செங்குன்றம் காவல் ஆய்வாளருக்கு பொதுமக்கள் பாராட்டு

**செங்குன்றம், ஆகஸ்ட் 20:**

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் பகுதியை சேர்ந்தவர் ரத்தினவேல் பாண்டியன் வயது (32) எலக்ட்ரீஷியன் ஆக வேலை செய்து வந்த ரத்தினவேல் பாண்டியன் நேற்று காலை மொண்டியம்மன் நகர் வஉசி தெருவில் உள்ள தனியார் பள்ளி அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது அவரை வழிமறித்த இருவர் சரமாரியாக அரிவாளால் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். ரத்தினவேலுவின் அலறல் சத்தத்தை கேட்ட அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்தபோது ரத்த வெள்ளத்தில் கீழே சரிந்து கிடந்தார்.

இதுகுறித்து பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த செங்குன்றம் காவல் துறையினர் வெட்டுப்பட்டு கிடந்த ரத்தினவேலை மீட்டு அருகே உள்ள பாடியநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதனையடுத்து சடலத்தை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து செங்குன்றம் காவல்துறையினர் நடத்திய விசாரணையில் கொலை செய்யப்பட்ட ரத்தினவேலு பாண்டியன் கடந்த சில மாதங்களாக தனது மனைவியை விட்டு பிரிந்து மனைவியின் அண்ணன் மனைவியுடன் திருமணத்தை மீறிய உறவில் இருந்து வந்தது தெரிய வந்துள்ளது. இதனை உறவினர்கள் பலமுறை கண்டித்தும் ஏற்காத நிலையில் ரத்தினவேலு பாண்டியன் மனைவியின் அண்ணன்கள் இருவர் சேர்ந்து ரத்தினவேலுவை சரமாரியாக வெட்டிக்கொலை செய்து தப்பியது தெரிந்தது.

இதனையடுத்து ரத்தினவேலுவின் மனைவியின் சகோதரர்கள் சரவணன், தனசேகர், உறவினர் பழனிசாமி ஆகிய மூவரை பிடித்து செங்குன்றம் காவல்துறையினர் விசாரணை நடத்தினர். விசாரணையில் ரத்தினவேல் பாண்டியன் பூர்ணிமா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டு இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். புழல் காவாங்கரை கண்ணப்பசாமி நகரில் வசித்து வந்த நிலையில் நாளடைவில் காதல் மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவரை பிரிந்து, தனது மனைவியின் அண்ணி சரண்யா என்பவர் உடன் காதல் வயப்பட்டு அவருடன் கடந்த சில மாதங்களாக மொண்டியம்மன் நகர் அருகே வசித்து வந்துள்ளனர்.



இது தொடர்பாக பலமுறை ரத்தினவேலுடன் பேசியும் திருமணத்தை மீறிய உறவிலிருந்து வெளியே வர மறுத்துள்ளார். காதல் திருமணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளையும் கொடுத்துவிட்டு தனது தங்கையின்வாழ்க்கையை கேள்விக்குறியாக்கிய ரத்தினவேலு, தனது மனைவியையும் தன்னிடம் இருந்து பிரித்து குடும்பத்தையே நாசமாக்கியதால் அவரை கொலை செய்ய சரவணன் திட்டமிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தனது சகோதரர் தனசேகர் நோட்டமிட்டு கூறியதும், இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த ரத்தினவேல் பாண்டியனின் வாகனத்தின் மீது மோதி இடித்து கீழே தள்ளி சரவணன் அவரது சித்தப்பா பழனிசாமி இருவரும் சரமாரியாக வெட்டிக் கொன்றது தெரியவந்தது. இதனையடுத்து காவாங்கரையை சேர்ந்த சரவணன் 39, தனசேகர் 34, எண்ணூர் சேர்ந்த பழனிசாமி 45 ஆகிய மூவரை கைது செய்த செங்குன்றம் போலீசார், கொலைக்கு பயன்படுத்திய 2 கத்திகள், இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பட்டப் பகலில் தனியார் பள்ளி அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற எலக்ட்ரீசியன் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் பொதுமக்களிடையே பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

கொலை நடந்த மூன்று மணி நேரத்திற்குள் 3 குற்றவாளிகளை கைது செய்து செங்குன்றம் காவல் ஆய்வாளர் கிருஷ்ண மூர்த்தியின் பணியை பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA